ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2050/43 – 2017 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා – 2017.12.22

*2050/43 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணம்

*திருத்த இலக்கம் - 2*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982/15 ஆம் இலக்க 2016.08.30 ஆந் திகதிய அதிவிசேஷ வர்த்தமானியினூடாக திருத்தியமைக்கப்பட்ட 1894/26 ஆம் இலக்க 2014.12.26 ஆந் திகதிய அதிவிசேஷ வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பினுள் பின்வரும் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.*

**ஏ. குலதுங்க**
*செயலாளர்*
*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு*
*2017, திசெம்பர் 20*

***7.2.2.2 ஆம் பிரிவு பின்வருமாறு உள்ளடக்கப்பட்டுள்ளது :-***

(i) *பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது கணினி அறிவியல் /தகவல் தொழில்நுட்பம்/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைக்கு உரித்தான டிப்ளோமா/உயர் டிப்ளோமா அல்லது அதனைவிட உயர் பாடநெறியொன்றினை கற்றுப் பூரணப்படுத்தியிருத்தல்.*

*அல்லது*

(ii) *பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி/ தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கு உரிய டிப்ளோமா பாடநெறி/ அதனை விடக் கூடிய பாடநெறி அல்லது 1,500 மணித்தியாலத்திற்கு குறையாத பாடநெறியை கற்று பூரணப்படுத்தியிருத்தல்.*

*அல்லது*

1A - PG3839 - 507 (2017/12)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(iii) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அவ் ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள நிறுவனமொன்றில் இருந்து அல்லது பாராளுமன்றத்தின் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு சட்ட நிறுவனமொன்றில் இருந்து -

(அ) கணினி/ தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கு உரிய தேசிய தொழிற் தகைமை (NVQ) ஐந்து (05) /அதனை விடக்கூடிய NVQ சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) 1,500 மணித்தியாலத்திற்கு குறையாத கணினி /தகவல் தொழில்நுட்பம்/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறைக்கு உரிய பாடநெறியொன்றினைக் கற்று பூரணப்படுத்தி இருத்தல்.

**7.3.1.2.1. (4) (i) ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது :-**

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொலைக்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய தொழிற்தகைமை (NVQ) ஏழு (07) அல்லது அதனை விடக்கூடிய NVQ சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

**7.3.2.2.3. (அ) (i) ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது :-**

3 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தினையுடைய அலுவலரொருவராக இருத்தல் மற்றும் உடன் முன்னரான ஐந்து வருடங்கள் (5) முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

**7.3.2.2.3. (அ) (ii) ஆம் பிரிவு நீக்கப்பட்டுள்ளது.**

**7.3.2.2.3. (ஆ) (ii) ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது :-**

இச் சேவைப் பிரமாணக் குறிப்பு 7.3.1.2.1 இன் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு.-** 7.3.1.2.1 இன் 4 (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் அனுபவங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு உரித்தற்றது.

**7.4.1.2.1. (3) (i) ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது :-**

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய தொழிற்தகைமை (NVQ) ஏழு (07) அல்லது அதனை விடக்கூடிய NVQ சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

**7.4.2.2.3. (1) (ஆ) ஆம் பிரிவு நீக்கப்பட்டுள்ளது.**

**7.4.2.2.3. (2) (ஆ) ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது :-**

7.4.1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு.-** 7.4.1.2.1 இன் (3) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் அனுபவங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு உரித்தற்றது.

***11.1 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.***

**பதவிகளுக்கு நியமித்தலுக்கான தகைமைகள் :-**

| பதவிகள் | தகைமைகள் |
|---|---|
| பணிப்பாளர் | 1 ஆம் வகுப்பின் I ஆம் தரத்தினையுடைய அலுவலராக இருத்தல் |
| பிரதிப் பணிப்பாளர் | 1 ஆம் வகுப்பின் I அல்லது II ஆம் தரத்தினையுடைய அலுவலராக இருத்தல் |
| உதவிப் பணிப்பாளர் | 1ஆம் வகுப்பின் I அல்லது II ஆம் அல்லது III ஆம் தரத்தினையுடைய அலுவலராக இருத்தல் |

***11.1.1 தேர்ந்தெடுக்கப்படும் முறைமை :***

**(i) *1 ஆம் வகுப்பு I/II ஆம் தரத்தினையுடைய பதவிகள்***

குறித்த தகைமைகளைப் பெற்றுள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் புள்ளிகளைப் பெற்றுக்கொடுக்கும் தலைப்பின் கீழ் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் சந்தர்ப்பத்திற்கேற்ப அங்கீகரிக்கப்படும் புள்ளி நடைமுறைக்கு ஏற்ப தகைமையினை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

| பரீட்சித்துப் பார்த்து புள்ளிகளை வழங்கும் தலைப்பு | அதிகபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|
| (1) மூப்புநிலை (60%) | 60 |
| (2) திறமைகள் (40%) | |
| (i) கல்வித் தகைமைகள் | 15 |
| (ii) தொழிற் தகைமைகள் | 10 |
| (iii) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள்/ மேம்படுத்தல்கள் மற்றும் வெற்றிகள்/ பரிசில்கள்/பாராட்டுக்கள் | 10 |
| (iv) நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமைகள் | 05 |

**குறிப்பு.**- விளக்கத்துடனான புள்ளி நடைமுறைப் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரும் சந்தர்ப்பத்தின் போது மேற்படி நடைமுறைக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**(ii) 1 ஆம் வகுப்பு III ஆம் தரத்தினையுடைய பதவிகள்**

குறித்த நிறுவன/திணைக்களத் தலைவரினால் சந்தர்ப்பத்திற்கேற்ப பதவிகளில் நியமிக்கப்படுகின்றார்கள்.

**3 ஆம் அட்டவணையின் 5 ஆம் பிரிவு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வினாப்பத்திரத்திற்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | பரீட்சார்த்தியிடம் காணப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பொது அறிவு, இயங்கு தளம்/மென்பொருள்/வன்பொருள் தொடர்பான அறிவு, இணையம் மற்றும் ஏனைய தகவல்கள் அமைப்புப் பகுப்பாய்வு, ஆக்கங்கள், பரிசோதனை, செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் (System Analysis, Design, Testing, Implementation and Maintenance) தொடர்பான அறிவு, தரவுத் தளம் (Data Base) இனை உருவாக்குதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அறிவு, கணினி வலையமைப்பு முகாமைத்துவம் தொடர்பான அறிவு, வலையமைப்பு மற்றும் மின்னஞ்சல் போன்ற துறைகள் தொடர்பான அறிவினைப் பரீட்சித்துப் பார்க்கும் கட்டமைக்கப்பட்ட மற்றும் பல்தேர்வு வினாக்களினை உள்ளடக்கியுள்ளது. வினாக்கள் அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும். |

**4ஆம் அட்டவணையின் 5 ஆம் பிரிவு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வினாப்பத்திரத்திற்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | பரீட்சார்த்தியிடம் காணப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கோட்பாடுகள் பற்றிய அறிவு, கணினி வடிவமைப்பு மற்றும் இயங்கு தளம்/மென்பொருள்/வன்பொருள் தொடர்பான அறிவு, e-அரசாங்க (e-gov) எண்ணக்கருவினை மிகவும் பயனுறுதி வாய்ந்த முறையில் செயற்பாட்டில் கொண்டு வருவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு, தகவல்கள் அமைப்புப் பகுப்பாய்வு, ஆக்கங்கள் பரிசோதனை, செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் (System Analysis, Design, Testing, Implementation and Maintenance) தொடர்பான அறிவு, தரவுத் தளம் (Data Base) இனை உருவாக்குதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அறிவு, வன்பொருள், தரவுத் தொடர்பாடல் மற்றும் கணினி வலையமைப்பு, இணையத்தளம், இணையத்தளங்களை உருவாக்கல் மற்றும் புதிய இணையத்தள சேவைகள், கணினி வலையமைப்பு முகாமைத்துவம் தொடர்பான அறிவு, இணைய வலையமைப்பு மற்றும் மின்னஞ்சல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்திட்ட வாழ்க்கைச் சுழற்சி போன்ற துறைகள் தொடர்பான அறிவு மற்றும் கண்காணிப்புத் திறனை ஆழமாகப் பரீட்சித்துப் பார்க்கும் வினாக்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமாகும். |

*01-223*